ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1466/25 - 2006 ඔක්තෝබර් 13 වැනි සිකුරාදා - 2006.10.13
1466/25 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்பு இல. ~~௪~~. 3

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்

1. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ரண்மினி குலரத்ன ஜயசூரிய ஆகிய நான், 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10(1) ஆ (ii) ஆம் பிரிவின் கீழ் செயற்பட்டுப் பின்வருமாறு பணிக்கின்றேன்.

இதன் கீழ் நிரற்படுத்தப்பட்டுள்ள முன்கூட்டியே சமைக்கப்பட்ட பண்டங்களினதும் உற்பத்திப் பொருட்களினதும் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், முகவர்கள், விநியோகத்தர்கள், விற்பனையாளர்கள் அனைவரும் பொருட்கள் நாட்டை வந்தடையும் நேரத்தில் ஏற்புடைத்தான "அதிகப்ட்ச சில்லறை விலையை" பொதிகளில் அல்லது கொள்கலங்களில் குறிக்கச் செய்வித்தல் வேண்டும்.

எந்தப் பண்டம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பொன்று வழங்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் பொருளிலுள்ள சுட்டுத்துண்டை, விவரணத்தை அல்லது விலைக்குறிப்பை அகற்றுகின்ற, மாற்றுகின்ற, துடைத்தழிக்கின்ற, தேய்த்தழிக்கின்ற அல்லது உருவழிக்கின்ற அல்லது அத்தகைய எவையேனும் பண்டங்களின் அல்லது பண்டங்களிலிருந்து சுட்டுத்துண்டு, விவரணம் அல்லது குறிக்கப்பட்ட விலை அகற்றப்பட்ட மாற்றப்பட்ட, துடைத்தழிக்கப்பட்ட தேய்த்தழிக்கப்பட்ட அல்லது உருவழிக்கப்பட்ட அத்தகைய பண்டங்களை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்காக முனைவு செய்கின்ற ஆள் எவரும் பாவனையாளர் அலுவல்கள்அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பணிப்புரை பின்வரும் பண்டங்களுக்கும் உற்பத்திப்பொருட்களுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும் :-

பொதிகளில் விற்பனையாகும், இறைச்சி மற்றும் இறைச்சி உற்பத்திப் பொருட்கள்

பொதிகளில் விற்பனையாகும் மீன் மற்றும் வேறு கடலுணவு

பொதிகளில் அல்லது கொள்கலங்களிலுள்ள உணவுக்குரிய எண்ணெய்

பொதிகளிலுள்ள தேயிலை

பொதிகளில் கோப்பி விதை மற்றும் கோப்பித் தூள்

சொக்கலேட் மற்றும் சொக்கலேட்டில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள்

சட்னி, ஊறுகாய் மற்றும் சோஸ்

பால் மா (முழுப் பாலாடை, குறை பாலாடை, குழந்தை மற்றும் மோல்டட்) கட்டிப்பால்

பொதிகளில் அல்லது கொள்கலங்களிலுள்ள மிளகாய்த்தூள்

பொதிகளில் அல்லது கொள்கலங்களிலுள்ள கொத்தமல்லி விதை அல்லது தூள்

பொதிகளில் அல்லது கொள்கலங்களிலுள்ள பலசரக்குத் தூள்

பொதிகளில் அல்லது கொள்கலங்களிலுள்ள மிளகு தூள்

பொதிகளில் அல்லது கொள்கலங்களிலுள்ள மஞ்சள் தூள்

கட்டிடத் தொழிலில் பயன்படுத்தப்படும் தீந்தைகள், வார்னிசுகள் மற்றும் கரைதிரவங்கள்

கொள்கலங்களிலுள்ள வீட்டுபயோக அழுகலெதிரி/அழுக்ககற்றிகள்

குழந்தை உணவு
பலவீனமுற்றோர் உணவு

பிஸ்கட்கள் மற்றும் மாவில் தயாரிக்கப்பட்ட எல்லா இனிப்புப் பண்டங்கள்

சீமெந்து

விவசாயப் பசளை

விவசாய இரசாயனப் பொருட்கள்

காற்றூட்டப்பட்ட நீர்

ஐஸ் கிறீம்

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் மா (ஏதேனும் தானியங்களில் அல்லது வகைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட தூள்).

சவர்க்காரம், (குளியல், மருத்துவ, கார்போலிக், முகச்சவரம், மென், திரவ குழந்தைச் சலவை),

சலவைத் தூள் (சீவல்கள் மற்றும் துண்டுகள்)

கொக்கோ வெண்ணெய்ப் பதிலீடுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள்

குழந்தை உற்பத்திப் பொருட்கள் (சம்பூ, எண்ணெய், டால்கம், பவுடர், லோசன்)

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் கேக், இனிப்பு போன்ற இனிப்புப் பண்டங்கள்

பற்பசை

மின்கலங்கள் (மின்பந்தம் மற்றும் ட்ரான்ஸிஸ்டர்)

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் சீனி

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள்

பொதிகளில் விற்பனையாகும் பாண்

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் ஔடதங்கள் மற்றும் உயிர்ச்சத்துக்கள்

மாஜரீன்

வெண்ணெய்

தகரத்திலடைத்த பழங்கள்

பழச்சாறு, கோடியல் மற்றும் பருகத் தயாரான அத்தகைய வேறு பானங்கள்

ஜேம், ஜெலி மற்றும் மார்மலேட்

யோகர்ட்

உணவு பதனிடும் பொருட்கள்

இயற்கை நொதி பிரித்தெடுப்பு உற்பத்திப் பொருட்கள்

தகரத்திலடைத்த மீன்

சீ எவ்எல் மின் குமிழ்கள்

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் கருவாடு மற்றும் மாசிக் கருவாடு

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் பாற்கட்டி

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் முட்டை

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் தயிர்

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் திரவப்பால் (வெறும், சுவையூட்டப்பட்டது அல்லது இனிப்பூட்டப்பட்டது)

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் மென்பானத் தூள்

போத்தலில் அடைக்கப்பட்ட நீர்

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் நூடில்ஸ், பஸ்டா மற்றும் மக்கரோனி

பொதிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் சோயா உற்பத்திப் பொருட்கள்

பொதிகளிகளில் அல்லது கொள்கலங்களில் விற்பனையாகும் பச்சை, வறுத்த உப்பிடப்பட்ட அல்லது சுவையூட்டப்பட்ட அவரைகள், விதைகள், பருப்புவகை மற்றும் இவற்றையொத்த உடன் உண்ணக்கூடிய உணவுத் தயாரிப்புகள்

2. ஒவ்வொரு பொருளினதும் பொதிகளில் அல்லது கொள்கலனில் உற்பத்தியாளரின், வழங்குநரின் அல்லது விநியோகத்தரின் பெயரும் பதிவு செய்யப்பட்ட முகவரியும் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3. இச்சந்தர்ப்பத்தில் "பொதி அல்லது கொள்கலன்" என்பது முன்கூட்டியே சிப்பமிடப்பட்ட சில்லறை உற்பத்திப் பொருட்களை உள்ளடக்கிய ஒரு பொதி அல்லது கொள்கலன் எனப் பொருள்படும்.

4. இப்பணிப்புரை 01.01.2007 தொடக்கம் அமுலுக்கு வரும்.

ரஞ்மினி குலரத்ன ஜயசூரிய,
பணிப்பாளர் நாயகம்,

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை,
இல.27, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02,
2006, செத்தெம்பர் 21.

10- 624

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.